1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சுங்கத்தின் சுங்க அலுவலர்களின் வெகுமதி நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்புடைய குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையில் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, நிதியத்தின் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமைகளை புலப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்குதல் தொடர்பில் பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பதுபற்றி பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு பொருட்டு நிதியத்தின் தொடர்ந்தியங்குதல் தொடர்பிலான அடிப்படையை பயன்படுத்தும் ஏற்புடமை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களிலுள்ள அது தொடர்பான வெளிப்படுத்தல்கள் மீது எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாவிடின் எனது அபிப்பிராயத்தை திரிபுபடுத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும்

உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க பணியகம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

1.5 நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான கருத்துரை

1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்காமை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன்படி அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டியபோதிலும், கொடுப்பனவுக்காக நிதிப் பிரிவுக்கு கிடைத்த வெகுமதிக் கோப்புகளின் அடிப்படையில் மட்டுமே நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் கிடைக்க வேண்டியிருந்த ரூபா 4,800,470,461 நிலுவை தண்டனைகள் மற்றும் பறிமுதல் தொகையில், இந்த நிதியத்துக்கு ஏற்புடைய 50 சதவீத பெறுமதியான ரூபா 2,400,235,230, நிதியத்தின் பெறத்தக்க வருமானமாகவும், தண்டனைகள் மற்றும் பறிமுதல்களாகவும் தற்போது கிடைத்திருப்பினும், வெகுமதிக் கோப்புகள் தயாரிக்கப்படாது செலுத்த வேண்டிய வெகுமதிகளின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.	தண்டனைகள் மற்றும் அரசுரிமையாக்கப்பட்ட பொருள் விற்பனை அனைத்து வருமானங்களும் நியதிச்சட்ட கொடுப்பனவுகளுக்கான தற்காலிக பிடித்துவைத்தல் கணக்கில் (18/128) வரவு வைக்கப்படுவதுடன், அந்தக் கணக்கில் பணம் வைப்பு செய்யப்படுகின்ற அனைத்து விசாரணைகளுக்காக அந்நிதியாண்டினுள் கொடுப்பனவு இடம்பெறாது. சிலவேளைகளில் அதற்கு பல ஆண்டுகள் செல்லலாம். விசாரணை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் சில விசாரணைகள் தொடர்பான குற்றப்பணங்கள் சம்பந்தப்பட்ட நபர்களுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய சந்தர்ப்பங்களும் உள்ளன. ஆதலால், விசாரணை முடிவடைந்து பணம் செலுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்திலேயே சுங்க	இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயலாற்றுதல் வேண்டும்.

	அலுவலர்களின் வெகுமதி நிதியத்தில் (6/62) பணம் வரவு வைக்கப்படும். அங்கு, நியதிச்சட்ட நிதியத்தில் உள்ள தண்டனைகள் மற்றும் அரசுரிமையாக்கப்பட்ட வருமானத்திலிருந்து அபராத செலவுகள் கழிக்கப்பட்டு, எஞ்சிய பணம் சுங்க அலுவலர்களின் வெகுமதி நிதியத்திற்கு 50% அரசாங்கத்திற்கு 30% மற்றும் சுங்க அலுவலர்களின் முகாமைத்துவ மற்றும் நட்டஈட்டு நிதியத்திற்கு 20% என்றவாறு வரவு வைக்கப்படும். எனவே, விசாரணைக் கோப்புகளின் அனைத்துப் பணிகளும் முடிவடைந்து, அங்கீகாரம் அளிக்கப்பட்டு, பணம் செலுத்துவதற்காகச் சமர்ப்பிக்கப்படும் வரை, அந்தக் கோப்புகளுடன் தொடர்புடைய தண்டனைகள் மற்றும் விற்பனைகள் வெகுமதி நிதியத்திற்கான பெறுவனவாக கணக்கில் பதிய முடியாது.	
(ஆ) நிதிச் செயலாற்றுகை கூற்றின் குறிப்பு இலக்கம் 2.6.2 மூலம் குறிப்பிடப்பட்டுள்ள போதைப்பொருள் நிதியத்தால் 2024 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 122,949,021 பெறுமதி அமைந்துள்ள விதம் பற்றி இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன்படி தெளிவான வெளிப்பாட்டை குறிப்புகள் மூலம் மேற்கொண்டிருக்கவில்லை.	கணக்காய்வு மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு எதிர்காலத்தில் செயலாற்றுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.	இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயலாற்றுதல் வேண்டும்.

1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31ஆம் திகதியன்று செலுத்த வேண்டிய வெகுமதித் தொகையாக அடையாளம் காணப்பட்டிருந்த ரூபா 23,285,174 பெறுமதி, நிதி செயலாற்றுகை கூற்றில் மீளாய்வாண்டிறான செலவொன்றாக அடையாளம் காணப்படவில்லை.	இத்தகைய குறைபாடுகள் எதிர்காலத்தில் செயலாற்றுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.	ஆண்டிற்குரிய செலவுகள் அனைத்தும் நிதிக் கூற்றுக்களில் பதியப்பட வேண்டும்.

1.5.3 இணங்காத மீதிகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் இறுதித் திகதியிலான பரீட்சை மீதியில், எரிபொருள் நிதியம், போதைப்பொருள் தடுப்பு நிதியம், 2.5% நிதியம் மற்றும் பிற ஒதுக்கங்கள் (other pools) பொருட்டான நிதியங்களின் வரவு மீதிகள் நிதி நிலைமை கூற்றில் காட்டப்பட்டுள்ள மீதிகளுடன் முறையே ரூபா 260,458,768, ரூபா 33,177,298, ரூபா 128,937,833 மற்றும் ரூபா 112,443,982 என்றவாறு மொத்தம் ரூபா 535,017,881 ஆல் இணங்காது இருந்தது.	பரீட்சை மீதியில் மற்றும் நிதிக் கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள மீதிகளின் வேறுபாட்டிற்கான காரணம் உரிமையாண்மை மாற்றங்களின் கூற்றில் (பக்கம் இலக்கம் 04) குறிப்பிடப்பட்டுள்ளது.	நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள மீதிகளை அதற்கு நேரொத்த ஆவணங்கள்/ அறிக்கைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்ததன் பிற்பாடு, சரியான புள்ளிவிபரங்கள் நிதிக் கூற்றுக்களில் சேர்க்கப்பட வேண்டும்.

1.6 சட்டங்கள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு		முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	**இணக்கமின்மைகள்**		
(அ)	1869 இன் 17ஆம் இலக்க சுங்க கட்டளைச்சட்டம்			
(i)	பிரிவு 153 (2) (ஆ)	நிதி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட வேண்டிய திட்டத்தின்படி நிதியத்திலிருந்து வெகுமதிப் பணம் பகிரப்பட வேண்டிய போதிலும், அத்தகைய அங்கீகாரம் இன்றி, 1988 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட பிஎல் 118 இலக்க திணைக்களக் கட்டளையின்படி, 2012 முதல் 2024 வரையிலான 13 ஆண்டுகளில், முறையான அங்கீகாரம் இன்றி ஓர் ஆவணம் மீது அலுவலர்களுக்கு ரூபா 25,244,792,239 மற்றும் தகவல் அளிப்பவர்களுக்கு ரூபா 4,554,073,737 செலுத்தப்பட்டுள்ளன.	கணக்காய்வு விசாரணையில் காட்டப்பட்டுள்ள கொடுப்பனவு திணைக்களத்தின் சுற்றறிக்கை ஏற்பாடுகளின்படி, நிலவும் தேவைப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, தகவலாளர்களுக்கும் விசாரணைகளில் முதன்மையாக செயல்படும் தரப்பினர்களுக்கும் இந்த நிதியத்திலிருந்து கொடுப்பனவு பொருட்டு அங்கீகாரம் வழங்குவதற்கு வசதியுண்டு. மேலும், ஒவ்வொரு ஆண்டும் வெகுமதி நிதியத்திலிருந்து வெகுமதித் தொகையை பகிர்வதற்காக செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிதி அமைச்சரின் தனிப்பட்ட அங்கீகாரம் பெறப்பட்டு, பணம் இன்றுவரை அலுவலர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது.	சுங்க கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குஇணங்க செயலாற்றுதல் வேண்டும்.

(ii)	பிரிவு 153(2)(ஆ)	நிதி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட உத்தேச முறையின்படி, வெகுமதி பணம் இயைபான அலுவலர்களுக்கும் தகவல் அளிப்பவர்களுக்கும் இடையே பகிரப்பட வேண்டியபோதிலும், அத்தகைய அங்கீகாரம் இன்றி தயாரிக்கப்பட்ட பிஎல் 118 இலக்க திணைக்களக் கட்டளை மற்றும் அதற்கு சேர்க்கப்பட்ட 19 திருத்தங்களின் அடிப்படையில், சுங்க விசாரணைகளுக்கு நேரடியாக பங்களிப்பு வழங்காத திணைக்களத்தின் 18 பிற பிரிவுகளின் அலுவலர்களுக்கும் மீளாய்வாண்டினுள் ரூபா 674,893,081 பொருட்டு வெகுமதி நிதியம் ஒதுக்கப்பட்டிருந்தது.	சுங்கத் திணைக்களத்தின் வெகுமதி நிதியத்திலிருந்து வெகுமதித் தொகையை பகிர்வதற்கு ஏற்புடையதாக 1988.01.28 ஆம் திகதிய பிஎல் 118 இலக்க திணைக்களக் கட்டளை மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் குணதிலகா எதிரிவீர வீரசேன வழக்கின் தீர்ப்பின்படி, செல்லுபடியானதும், செயல்பாட்டுக்கு ஏற்ற மற்றும் அமுல்படுத்தக்கூடிய ஆவணமாக அறிவிக்கப்பட்டுள்ளமையினால், அது ஒரு வழக்குச் சட்டமாக(Case Law) மாறியுள்ளது. அத்துடன், சுங்க வெகுமதி பணத்தை பகிர்வதற்கு ஏற்புடைய பிஎல் 118 இலக்க திணைக்களக் கட்டளை உரிய பொறிமுறையொன்று ஊடாக தேவையான அங்கீகாரத்துடன் வெளியிடப்பட்ட ஆவணம் என்று உயர் நீதிமன்றம் முடிவு செய்துள்ளது என சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட E/248/2002 ஆம் இலக்க 2002.12.31 ஆம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்ட சட்ட விளக்கத்தின்படியும் தோன்றுகிறது.	சுங்க கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குஇணங்க செயலாற்றுதல் வேண்டும்

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவு ரூபா 468,663,285 மிகை ஏற்பட்டிருந்தவுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 424,344,028 ஆக இருந்தது. அதற்கிணங்க, நிதிசார் விளைவுகளில் ரூபா 44,319,257 வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. தண்டனைகளை விதிப்பதன்மூலம் கிடைத்த வருமானம் 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டில் ரூபா 2,894,401,737 ஆல் அதிகரித்தமை இதற்கான பிரதான காரணமாக விளங்கியது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	<u>கணக்காய்வு அவதானிப்பு</u>	<u>முகாமைத்துவத்தின் கருத்துரை</u>	<u>பரிந்துரை</u>
(அ)	வாகன உதிரி பாகங்கள் மற்றும் துணைக்கருவிகள் என வெளிப்படுத்தி 2024 ஆம் ஆண்டில் ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்த ஒரு கொள்கலன், இலங்கை சுங்கத்தின் இடர் முகாமைத்துவ அலகு (RMU) மற்றும் புதிய கொள்கலன் ஸ்கேனிங்	இறக்குமதி கொள்கலன்களை சோதனை செய்தல் தொடர்பாக 2016 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட செய்வதற்கான நடைமுறை கோவையின் பிரகாரம், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை	விசாரணைகளை விரைவாக முடிவுறுத்தி, குற்றவாளிகளாகும் அலுவலர்கள் தொடர்பில்

	முறைமை(Scanning Machine) ஆகியவற்றால் அதிக ஆபத்தானது என வகைப்படுத்தப்பட்டு, ஆழமான சோதனைக்காக கிரே லைன் II கொள்கலன் சோதனை நிலையத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. அந்த நிலையத்தின் சுங்க அதிகாரிகள் தங்கள் கடமைகளை உரியவாறு மேற்கொள்ளாமல் கொள்கலனை விடுவிக்க முயன்றமை காரணமாக கொள்கலனை மீண்டும் சோதனை செய்வதற்காக இலங்கை சுங்கத்தின் வருவாய் மேற்பார்வைப் பிரிவுக்கு (RTF) அனுப்பப்பட்டது. இருப்பினும், அந்தப் பிரிவும் முறையான விசாரணைகளை மேற்கொள்ளாததால், கொள்கலன் சோதனைக்காக சுங்க மத்திய புலனாய்வுப் பிரிவிடம் (CIB) ஒப்படைக்கப்பட்டது. மத்திய புலனாய்வுப் பிரிவு மேற்கொண்ட பௌதிக சோதனையின்போது கொள்கலனில் 609 வெளிப்படுத்தப்படாத மற்றும் குறைவாக வெளிப்படுத்தப்பட்ட பொருட்கள் 609 அலகுகளும், இறக்குமதி, ஏற்றுமதித் திணைக்களத்தின் உரிமம் பெறப்பட வேண்டிய 122 பயன்படுத்தப்பட்ட வாகன இருக்கைகள் மற்றும் 18 டயர்கள் உள்ளன என கண்டுபிடிக்கப்பட்டு இறக்குமதியாளர் புரிந்த சுங்க தவறுகளுக்கு ஏற்புடையதாக ரூபா 450,000 தண்டப்பணம் விதிக்கப்பட்டு,122 பயன்படுத்தப்பட்ட வாகன இருக்கைகள் மற்றும் 18 டயர்கள் என்பன அரசுரிமையாக்கப்பட்டன. இருப்பினும், கேள்விக்குட்பட்ட இந்த கொள்கலனை முறையாக சோதனை செய்யாமல் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த கிரே லைன் II கொள்கலன் ஆய்வு நிலையம் மற்றும் வருவாய் மேற்பார்வைப் பிரிவு (RTF) சுங்க அலுவலர்கள் தொடர்பில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம், எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	முறையாக சோதனை செய்து அரசாங்க வருவாயை சரியாக அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் சட்டவிரோதமான, இறக்குமதி மட்டுபடுத்தப்பட்ட பொருட்கள் நாட்டிற்குள் வருவதைத் தடுத்தல் என்பன சுங்க அலுவலர்களின் பிரதான கடமையாகும் என்பதுடன், முறையான சோதனை இன்றி கேள்விக்குட்பட்ட கொள்கலனை விடுவித்தமை தொடர்பாக மத்திய புலனாய்வுப் பிரிவு மீண்டும் விசாரணையைத் தொடங்கியுள்ளது. அந்த விசாரணையின் பரிந்துரைகளின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பாக உங்களுக்கு அறிவிக்கப்படும்.	பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	பொருட்களின் இறக்குமதி, ஏற்றுமதி செயன்முறை மற்றும் தொடர்புற்ற தரப்பினர்களால் செய்யப்படுகின்ற பல்வேறு முறைகேடுகள் தொடர்பாக இலங்கை சுங்கத்தின் பல்வேறு பிரிவுகள் விசாரணைகளை நடத்தி சுங்க	இயைபான நிலுவை தண்டனைகள் மற்றும் பறிமுதல் பெறுமதிகளை அறவிட்டுக் கொள்வதற்குத் தேவையான பின் ஆய்வாக, இயைபான நிறுவனங்கள் மற்றும்	நீண்ட காலமாக அறவிடப்படாதுள்ள தண்டனைகள் மற்றும்

	கட்டளைச்சட்டத்தின் பிரிவுகளின்படி விதிக்கப்பட்ட தண்டனைகள் மற்றும் பறிமுதல் பெறுமதிகளை முறையாக அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தினால், மீளாய்வாண்டில் 12 பிரிவுகளால் நடத்தப்பட்ட சுங்க விசாரணைகளுக்கு ஏற்புடையதாக ரூபா 4,800,470,461 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. இந்த நிலுவைத் தொகையில், ரூபா 3,372,004,119 தொகை 01 ஆண்டுக்கும் மேலாக நிலுவையில் உள்ள போதிலும், அதனை அறவிட்டுக் கொள்வதற்கு போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நபர்களுக்கு நினைவூட்டல்கள் அனுப்புதல், சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஆலோசனை பெறுதல் மற்றும் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்கின்றன.	பறிமுதல்களை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	21 சுங்க விசாரணை சம்பவ கோப்புகளில் மட்டுமே, பல்வேறு சுங்க தவறுகள் புரியப்பட்டு, ரூபா 607,547,151 வரித்தொகையைச் செலுத்துவதைத் தவிர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதுடன், சுங்க விசாரணைகளுக்குப் பிறகு, ரூபா 10,453,231,592 தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர், தண்டப்பணம் ரூபா 979,794,078 வரை 90 சதவீதத்தால் தளர்த்தப்பட்டதன் காரணமாக தண்டப்பணத்தில் 30 சதவீதமான ரூபா 293,938,223 மட்டுமே அரசாங்க வருவாயில் வரவு வைக்கப்பட்டிருந்தது. அதன்படி, சுங்க கட்டளைச்சட்டத்தின் பிரிவு 166(ஆ)(ஆ) இன்படி விவேகத்துடன் செயல்பட்டு தண்டப்பணமாக விதிக்கப்பட வேண்டிய பெறுமானத்தை தீர்மானிக்காத காரணத்தினால், அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 607,547,151 வரித் தொகையில் ரூபா 313,608,928 ஐ அறவிட்டுக் கொள்ளும் வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தது.	சுங்க கட்டளைச்சட்டத்தின் தத்துவங்களின் பிரகாரம், ஒவ்வொரு விசாரணைக்குரிய விடயங்களைக் கருத்தில் கொண்டு மற்றும் விசாரணையின்போது முன்வைக்கப்பட்ட விடயங்களையும் கருத்தில் கொண்டு விசாரணையை நடத்தும் விசாரணை அதிகாரி, சம்பந்தப்பட்ட நிறுவனத்தால் செய்யப்பட்ட தவறுக்கு ஏற்ப, தண்டப்பணத்தை நிர்ணயிக்கிறார். அங்கு விசாரணை அதிகாரி, சுங்க கட்டளைச்சட்டத்தின் 163 மற்றும் 163B ஆகிய பிரிவுகளின்படி, இயைபான பொருள் இறக்குமதியாளர்களின் (Consignee) காரணம் காட்டலை(Show cause) கருத்தில் கொண்டு தண்டப்பணத்தைக் குறைத்துள்ளார்.	அரசுக்கு வர வேண்டிய வருவாயை முறையாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சுங்க விசாரணைகளுக்குத் தேவையான எரிபொருள் செலவுகளை ஈடுசெய்யும் நோக்கில், வெகுமதி நிதியத்தின் உப நிதியமொன்றாக எரிபொருள் நிதியம் உருவாக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிலும் ரூபா 260,462,336 குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. இருப்பினும்,	அவதானிப்புடன் இணங்குகின்றேன்.	நிதிய பயன்பாடு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

	விசாரணை நடவடிக்கைகளுக்கான எரிபொருள் செலவு திணைக்களத்தின் பொதுச் செலவுத் தலைப்பின் கீழ் செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி, உண்மையான தேவையின்றி இந்த நிதியத்திற்கு தொடர்ந்தும் பணம் சேகரிக்கப்பட்டமையினால், மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் அதன் திரண்ட மீதி ரூபா 1,200,958,540 ஆக இருந்தது.		
(ஆ)	இலங்கை சுங்கத்தின் பல்வேறு பிரிவுகளால் தொடங்கப்பட்ட 9,519 விசாரணைகள் மீளாய்வு ஆண்டின் இறுதி வரையிலும் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. அவற்றில், 3,038 விசாரணைகள் 5 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டிருந்ததுடன், 4,958 விசாரணைகள் 01 முதல் 04 ஆண்டுகளுக்கு இடையில் தொடங்கப்பட்டிருந்தன. இவ்வாறு விசாரணைகளை முடிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, கைப்பற்றப்பட்ட பொருட்கள் பழுதடைதல், காலாவதியாதல், பின்னரான விற்பனையால் சரியான பெறுமதியைப் பெற முடியாமல் போதல், தகவலாளர்களும் அதிகாரிகளும் அதைரியமடைதல் மற்றும் அரசாங்கத்திற்கு வர வேண்டிய வருவாய் பெறுவதில் தாமதம் போன்ற பாதகமான நிலைமைகள் உருவாகியுள்ளன.	விசாரணைகளைத் தீர்ப்பதில் தாமதம் ஏற்படுவதற்கு பின்வரும் காரணங்கள் உள்ளிட்ட பல்வேறு காரணங்கள் உள்ளன. I. சுங்கக் தவறு இடம்பெற்றுள்ளது/இடம்பெற வில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான தகவல்களையும் ஆவணங்களையும் தேடிக்கொள்வதற்கு/ தருவித்துக்கொள்வதற்கு/ பெற்றுக்கொள்வதற்கு சிறிது காலம் செல்லும். II. சுங்கத்திற்கு கிடைத்த தகவல்கள் / தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்கும் அதற்கேற்ப மீண்டும் மீண்டும் விடயங்களை கண்டுபிடிப்பதற்கு/ தகவல்கள பெற்றுக்கொள்வதற்கு காலம் செல்லும். III. சந்தேகத்திற்குரிய தரப்பினர்/நிறுவனங்கள் ஏற்புடையவாறு சுங்கத்திற்கு பதிலளிப்பதற்கு சிறிது காலம் செல்லும். சில வேளைகளில் கால அவகாசம் கோரப்படும். IV. சந்தேகத்திற்குரிய தரப்பினர் சுங்கத்திற்கு பதிலளிக்காதபோது, அவர்களை சட்டத்தின் முன் கொண்டுவருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு காலம் செல்லும். V. சுங்கத்தால் தடுத்து வைக்கப்படுகின்ற பொருட்கள் தொடர்பான	விசாரணைகளை விரைவாக முடிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

ஆய்வுகூட பரிசோதனை அறிக்கைகள் / தர பரிசோதனை அறிக்கைகள் / மதிப்பீட்டு அறிக்கைகள் போன்றவற்றை பெறுவதற்கு காலம் செல்லும்.

VI. பொருட்களை விடுவிப்பதற்கு முன்பு, பூர்த்திசெய்ய வேண்டிய ஏனைய ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்திசெய்வதற்கு அதாவது ஏற்புடையவாறு அனுமதிகள், அங்கீகாரங்களைப் பெறுவதற்கு காலம் செல்லும்.

VII. பொருட்களை மீண்டும் ஏற்றுமதி செய்வதற்கு உத்தரவிடப்படும்போது, இறக்குமதியாளர் பொருட்களை மீண்டும் ஏற்றுமதி செய்வதற்கு காலம் செல்லும்.

VIII. அரசுரிமையாக்கப்பட்ட பொருட்களை கையுதிர்க்கும் செயன்முறைக்கு காலம் செல்லும்.

IX. சுங்க விசாரணை முடிவுக்கு எதிராக சுங்கத்தில் மேன்முறையீடு செய்யப்படும்போது, மேன்முறையீடுகளை விசாரிப்பதற்காக நியாயமான காலம் செல்லும்.

X. சுங்க விசாரணைக்கு /முடிவுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்குமிடத்து, வழக்குத் தீர்ப்பு கிடைக்கும் வரையில் சுங்க விசாரணை கோப்பு மூடப்பட மாட்டாது.